**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: சரவணகுமார்**

**தேதி: 27.09.2025 நேரம்: மாலை 6.10 மணி**

---

**தலைப்புச் செய்திகள்**

*பிரதமர்* (16)

உலகளாவிய தொலைதொடர்பு தொழில்நுட்ப மையமாக இந்தியா உருவெடுக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். ஒடிசா மாநிலம் ஜார்ஜ்குடாவில் பிஎஸ்என்எல் 4 ஜி தொழில்நுட்ப கட்டமைப்பு சேவையை இன்று தொடக்கி வைத்து பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டி எழுப்ப இத்தகைய உயர் தொழில்நுட்பங்கள் மிகுந்த பயனளிக்கும் என்றார். சுதேசி-4ஜி மற்றும் 5ஜி தொலை தொடர்பை கொண்ட 5 முன்னனி நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம் பிடிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார். நாட்டில் முழுமையான 4ஜி தொழில்நுட்பத்தை பிஎஸ்என்எல் உருவாக்கி உள்ளதாக பெருமிதம் தெரிவித்த அவர், நிபுணர்களின் கடின உழைப்பால் இது சாத்தியமானது என்றார். இந்நிகழ்ச்சியில், தொலைதொடர்பு, ரயில்வே, உயர் கல்வி, சுகாதாரம், திறன் மேம்பாடு, கிராமப்புற வீட்டு வசதி உள்ளிட்ட துறைகளில் 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு பிரதமர் இன்று அடிக்கல் நாட்டினார். சூரத்-பெர்காம்பூர் மற்றும் உத்னா இடையேயான அமிருத் பாரத் விரைவு ரயிலையும் பிரதமர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

**மோடி** *ஜிஎஸ்டி* (7)

சரக்கு மற்றும் சேவை வரிக்குறைப்பு பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார். சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவிட்டுள்ள அவர், இது தொடர்பான நிதியமைச்சகத்தின் அறிக்கையையும் பகிர்ந்துள்ளார். பண வீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு இது உதவிடும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டினார். இந்த வரிக்குறைப்பு காரணமாக இணைய விற்பனை 25 சதவிகிதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

*சேவா சப்தாஹ்- சின்னம்* 1 (9)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, **மக்கள் சேவை-நல்லாட்சி** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. அரசின் பல்வேறு முயற்சிகளால், மத்திய அரசு ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு செயலாற்றி வரும் நிலையில், தேசப் பற்றை ஊக்குவிக்கும் வகையில் நாட்டின் பாரம்பரிய கலாச்சாரத்தையும், மறைந்த தலைவர்களையும் கவுரவிக்கும் எதிர்கால சந்ததியினருக்கு உத்வேகம் அளிக்கும் நடைமுறைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது குறித்து, இன்று, **சேவைத் திருவிழா** என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம். ..........

**(வாய்ஸ்)**

*சேவா சப்தாஹ்- சின்னம்* 2 (4)

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் தேசிய சின்னங்கள் மற்றும் நினைவகங்கள் மூலம் நாட்டின் மறைந்த தலைவர்களை நினைவு கூர்ந்து தேசத்தின் கலாச்சாரத்தை முன்னெடுத்து செல்வது குறித்து பிரதமர் புதிய நாடாளுமன்ற வளாக திறப்பு விழாவில் உரையாற்றுகையில் ……

(வாய்ஸ் பிரதமர் )

*சேவா சப்தாஹ்- சின்னம்* 3 (13)

புதுடெல்லி தேசிய போர் நினைவு சின்னம் நமது வீரர்களின் துணிச்சல் மற்றும் தியாகத்திற்கு சான்றாக திகழ்கிறது. அமிர்தசரசில் புதுப்பிக்கப்பட்ட ஜாலியன் வாலாபாக் நினைவு சின்னம் சுதந்திர போராட்டத்தின் வரையறுக்கப்பட்ட அத்தியாயங்களின் நினைவை எடுத்துரைக்கிறது. மேலும், தீன் மூர்த்தி தோட்டத்தில் பிரதான் மந்திரி சங்கராலயம், இந்தியாவின் பிரதமர்களின் பயணத்தை விவரிக்கிறது. சுதந்திரத்திற்கு பிறகு, குடியரசை வழிநடத்திய ஜனநாயக உணர்வை எடுத்துரைக்கும் வண்ணமாக இது அமைந்துள்ளது. நாடு முழுவதும் உள்ள பழங்குடி சுதந்திர போராட்ட வீரர் அருங்காட்சியகங்கள், இதுவரை யாரும் அறிந்திராத பழங்குடி வீரர்களுக்கு அங்கீகாரத்தை வழங்குகிறது. புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபம் உலகளாவிய அமைப்பில் நாகரீக மகத்துவதை பிரதிபலிக்கிறது. இந்த பாரம்பரிய சின்னம் கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இடையிலான ஒரு பாலமாக அமைகிறது.

*மன் கீ பாத்* (8)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், 126 ஆவது மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சி ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து

அலைவரிசைகளிலும், AIR செய்தி வலைதளத்திலும், Newsonair மொபைல் செயலியிலும், ஒலிபரப்ப கேட்கலாம். ஆகாஷ்வாணியில், பிரதமரின் ஹிந்தி உரையை தொடர்ந்து, அதன் பிராந்திய மொழி வடிவம் இடம் பெறும்.

*ஐநா* (14)

தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாக இந்தியா மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது. ஐநா பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய இந்தியாவிற்கான நிரந்தர பிரதிநிதி திருமதி பெட்டல் கேலட் தீவிரவாத்தை வெளியுறவுக் கொள்கையாகவே பாகிஸ்தான் கடைபிடித்து வருவதாக குற்றம் சாட்டினார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ராணுவமும், மக்களும் மரியாதை செலுத்தியதை அவர் சுட்டிக் காட்டினார். ஆபரேஷன் சிந்தூரை நிறுத்திக் கொள்ளுமாறு பாகிஸ்தான் கெஞ்சியதாகவும் அவர் கூறினார். இதில், எந்த ஒரு மூன்றாம் நாட்டிற்கும் பங்கு இல்லை என்றும் அவர் தெளிவுப்படுத்தினார். இந்தியாவிற்கு எதிராக தீவிரவாத செயல்களில் யார் ஈடுபட்டாலும், உரிய பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார். பாகிஸ்தானில் செயல்படும் தீவிரவாத முகாம்களை அழிக்க அந்நாட்டு அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

*ஜிஎஸ்டி- சுற்றுலா* 1 (8)

நாட்டில் தற்போது அமலாகி வரும், அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், மறைமுக வரிக் கட்டமைப்பை எளிமைப் படுத்துவதில், முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளன. இதுவரை 4 அடுக்குகளாக இருந்த ஜிஎஸ்டி கட்டமைப்பு, 5 சதவிகிதம், 18 சதவிகிதம் என, 2

அடுக்குகளாக குறைக்கப் பட்டுள்ளது. இந்த சீர்திருத்தங்களின் கீழ், சுற்றுலா மற்றும் பொது போக்குவரத்தை மலிவு விலையில் மாற்றுவதை நோக்கமாக கொண்டு குறிப்பிடத் தக்க வரி குறைப்புகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி- சுற்றுலா* 2 (17)

இந்தியாவின் சுற்றுலாத் துறையை மிகவும் மலிவு விலையில் மாற்றுதல், பொதுப் போக்குவரத்து பயன்பாட்டை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்ட குறிப்பிடத் தக்க ஜிஎஸ்டி வரிக் குறைப்பு நடவடிக்கைகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. இது, உள்நாட்டு சுற்றுலா-சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்தவும், கலாச்சார பாரம்பரியத்தை ஊக்குவிக்கவும் மற்றும் அது தொடர்புடைய துறைகளில் முதலீட்டை அதிகரிப்பதாகவும் அமைந்துள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் இந்த சீர்திருத்தங்கள் நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி, வேலை வாய்ப்பு உருவாக்கம், மற்றும், விருந்தோம்பல் ஆகியவற்றை வளர்ப்பது, அதே நேரத்தில் இந்தியாவின் சுற்றுலாத் துறையில் கோவிட்-க்கு பிந்தைய மீட்சியை துரிதப்படுத்துதல் ஆகியவற்றின் தொலைநோக்கு பார்வையுடன் அமைக்கப் பட்டுள்ளது. விடுதிகளுக்கான ஜிஎஸ்டி 12 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைந்துள்ளது. இது, நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் பயணிகளுக்கு தங்கும் இடங்களை மிகவும் மலிவு விலையில் வழங்க வழி வகுக்கிறது. வார இறுதி பயணம் , புனித யாத்திரை சுற்றுலாக்கள், பாரம்பரிய மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலாக்கள் ஆகியவை இந்த ஜிஎஸ்டி வரிக்குறைப்பினால் அதிகரிக்கும்

*ஜிஎஸ்டி- சுற்றுலா 3 (10)*

என்று எதிர் பார்க்கப்படுகிறது. மேலும், 10 பேர் அமரக்கூடிய பேருந்துகளுக்கான ஜிஎஸ்டி 28 சதவிகிதத்தில் இருந்து 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. பேருந்துகள் மற்றும் மினி பஸ்களின் செலவை குறைத்து அவற்றை விமானப் போக்குவரத்து நிறுவனங்கள், பள்ளிகள், பெரு நிறுவனங்கள், சுற்றுலா வழங்குநர்கள் மற்றும் மாநில போக்குவரத்து நிறுவனங்கள் எளிதாக பயன்படுத்தக் கூடியதாக மாற்றுகிறது. குறிப்பாக, நகர்புற மற்றும் கிராமப்புற வழித் தடங்களில் டிக்கெட் கட்டணங்களை குறைக்க உதவுகிறது. தனியார் வாகனங்களில் இருந்து பொது வாகனத்திற்கு மாறுவதை இந்த ஜிடிஸ்டி வரிக் குறைப்பு ஊக்குவிக்கிறது. மேலும், நெரிசல் மற்றும் மாசுபாட்டை குறைக்கிறது.

*ஜெய்சங்கர்* (8)

ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் வளரும் நாடுகளின் பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தி உள்ளார். ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்கள் குறித்து ஜி 4 நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு குறிப்பிடத் தக்க பங்ளிப்பை வழங்கும் நாடுகள் நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற உறுப்பினர் பிரிவுகளில் பிரதிநிதித்துவம் படுத்தப்பட வேண்டும் என்றார்.

*சவுகான்* (7)

நமது நாட்டின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் புராதான சின்னங்களை பாதுகாக்கவும் அவற்றை தூய்மையாக பரமாரிக்கவும் அனைவரும் உறுதி ஏற்போம் என்று மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கேட்டுக்கொண்டுள்ளார். உலக சுற்றுலா தினத்தை ஒட்டி, சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், இக் கோரிக்கையை விடுத்துள்ளார். சுற்றுலா என்பது மகிழ்ச்சி மட்டுமன்றி, அறிவு மற்றும் அனுபவத்தை வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

*துணை நிலை ஆளுநர்* (10)

புதுச்சேரி அரசு கலை பண்பாட்டுத்துறை மற்றும் மத்திய அரசின் இந்திராகாந்தி தேசிய கலை மையம் சார்பில் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான ஒருநாள் ஓவிய பட்டறை உப்பளம் பெட்டி செமினார் தொடக்க பள்ளி வளாகத்தில் இன்று நடைபெற்றது. துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் ஓவிய பட்டறையை தொடங்கி வைத்து உரையாற்றினார். நிகழ்ச்சியில், உள்துறை அமைச்சர் திரு நமசிவாயம் கலை பண்பாட்டுத்துறை செயலர் முகமது ஆசின் அபித், இயக்குனர் பொறுப்பு திரு முனுசாமி, இந்திராகாந்தி தேசிய கலை மைய இயக்குனர் திரு சுமித் தே ஆகியோர் கலந்து கொண்டனர். புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த பல்வேறு பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் இந்த ஓவியப் பட்டறையில் பங்கேற்றனர்.

*லட்சுமி நாராயணன்* (20)

உலக நாடுகளில் வரி விதிப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் தெரிவித்துள்ளார். புதுவை அரசின் வணிக வரித்துறை சார்பில் அடுத்த தலைமுறைக்கான சேவை வழங்கும் ஜிஎஸ்டி சீர்த்திருத்தம் என்னும் தலைப்பில் வர்த்தக மற்றும் தொழில் கூட்டமைப்பு மற்றும் ஜிஎஸ்டி தொழில் வல்லுநர்களுடான

கலந்துரையாடல் கூட்டத்தை தொடங்கி வைத்து பேசிய அவர், நம் நாட்டில் ஜிஎஸ்டி வரி வருவாய் கடந்த 4 ஆண்டுகளில் 14 லட்சம் கோடியில் இருந்து 2 மடங்காக உயர்ந்து 22 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்தது என்றும், இருப்பினும் மக்களின் மீது கூடுதல் சுமை விதிக்க வேண்டாம் என்று கருதி பிரதமர் திரு நரேந்திர மோடி தீபாவளி பரிசாக ஜிஎஸ்டி 2.0 சீர்திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். சாதாரண மக்கள் பயன்படுத்தும் எல்லா பொருள்களுக்கும் ஜிஎஸ்டியில் வரி குறைக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், இன்சூரன்ஸ் துறையில் முற்றிலுமாக வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த ஜிஎஸ்டி சீர்திருத்த நடவடிக்கையால் மக்களிடம் சேமிப்பு அதிகரிக்கும் என்றார். அதனால் அவர்களிடம் வாங்கும் சக்தி அதிகரிக்கும் என்றும், இதனால் வியாபாரமும் அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார். ஜிஎஸ்டி வரி குறைப்பால் புதுவைக்கு ரூ,190 முதல் ரூ.200 கோடி இழப்பு ஏற்படும். இருப்பினும் வியாபாரம் அதிகரித்தால் வருவாய் அதிகமாகக் கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.

*விளையாட்டு* (10)

உலக பாரா வில்வித்தை போட்டியில் இந்தியாவின் ஷீத்தல் – சரிதா இணை வெள்ளிப்பதக்கம் வென்றது. தென் கொரியாவின் குவான்ஷூவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியா 1 தங்கம், 1 வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளது. புதுடெல்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் 10 மீட்டர் கலப்பு இரட்டையர் பிரிவில் ராஷ்மிகா – கபில் இணை தங்கப்பதக்கத்தையும், வன்ஷிகா- ஆண்டனி இணை வெள்ளிப்பதக்கத்தையும் வென்றது. இப்போட்டியில் இந்தியா இதுவரை, 3 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கல பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கிறது.

*வானிலை* (5)

தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக நாளை முதல் வரும் அக்டோபர் 3 ஆம் தேதி வரை தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.